பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper

பொது சன நூலகம்
23 APR 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 10 புதன்கிழமை (23-04-1997) - UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 146

# வாழைச்சேனையில் 2 ஆம் நாளாக

# நேற்றும் படையினர்-புலிகள் மோதல்

## இதுவரை 23 படையினர் பலி என அரசு அறிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 23

**வாழைச்சேனைப் பகுதியில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இரண்டாவது நாளாக நேற்றும் மோதல்கள் இடம்பெற்றன. நேற்றைய மோதல்களிலும் நேற்று முன் தினம் புலிகள் நடத்திய தாக்குதலிலும் மொத்தம் 23 படையினர் கொல்லப்பட்டதாக நேற்று அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன. கொல்லப்பட்டவர்களில் உயர் இராணுவ கொமாண்டோப் படையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளும் அடங்குவர்.**

இரு நாள் மோதல்களிலும் புலிகள் தரப்பில் 20 க்கும் அதிகமானோர் கொல்லப் பட்டுள்ளனர் என்றும் —

இவர்களில் அறுவரின் சடலங்கள் படையினரால் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடமிருந்து 8 துப்பாக்கிகளையும் யுத்த உபகரணங்களையும் படையினர் கைப்பற்றி உள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனையில் நேற்று முன்தினம் படையினர் கும்புறு மூலை நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த சமயம் நடத்தப்பட்ட தாக்குதலில் 12 படையினர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இத் தாக்குதலை அடுத்து படையினர் நேற்று பேத்தாளை, பாண்டி மடு, பாசிக்குடா ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்தினர்.

அப்பொழுது புலிகளுடன் ஆங்காங்கே இடம் பெற்ற மோதல்களிலேயே மேலும் 11 படையினர் கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## ஜி.சீ.ஈ. முடிவுகள் மேலும் தாமதமாகும்

கொழும்பு, ஏப். 23

கடந்த டிசம்பர் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சை முடிவுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் வெளியிடப்படலாம் என நம்பப்படுவதாக பரீட்சை ஆணையாளர் காமினி குணரத்தின தெரிவித்தார்.

மின் சக்தியில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்காக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் அவதானித்த "மர்மக் கப்பல்கள்"

கொழும்பு, ஏப். 23

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரு கப்பல்கள் முல்லைத்தீவுக் கடலில் காணப்படுவதாக விமானப்படை தெரிவித்த தகவலையடுத்து இரு அதி வேகப்படகுகள் திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவுக்கு விரைந்து சென்றன.

கடந்த சனிக்கிழமை காலை 10 மணியளவில் இச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஓடு பாதையை விட்டுச் சறுக்கி அன்ரனோவ் விபத்துக்குள்ளானது

### இரத்மலானையில் சம்பவம்

கொழும்பு, ஏப். 23

பலாலியில் இருந்து புறப்பட்டு இரத்மலானை விமான நிலையத்தில் தரையிறங்கிய அன்ரனோவ் — 32 ரக விமானம் விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றது.

படையினரை ஏற்றிக் கொண்டு சென்ற இந்த விமானம் இரத்மலானை விமானத் தளத்தில் தரையிறங்கிய சமயம் ஓடு பாதையை விட்டு விலகியதால் விபத்து நேர்ந்ததாக முற் கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பலத்த மழை காரணமாகவே விமானம் ஓடுபாதையை விட்டுச் சறுக்கியதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்துச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் —

சேதமடைந்த விமானம் திருத்தப்படவிருப்பதாகவும் இலங்கை வானொலி அறிவித்தது. (ஐ)

## சந்திரிகா - ரணில் உடன்பாட்டில் தொண்டாவுக்கு நம்பிக்கையில்லை

### பி. பி. ஸிக்கு அவரே தெரிவிப்பு

லண்டன், ஏப். 23

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு நடைமுறையில் வந்த பின்பே அதன் விளைவு தெரிய வரும். இது போல் எத்தனையோ ஒப்பந்தங்கள் தமிழர் பிரச்சினை தொடர்பாக வந்து போய்விட்டன.

இ. தொ. கா தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதிக்கும், ஐ.தே.க. தலைவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாடு தொடர்பாக பி. பி. ஸி. செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் பல ஒப்பந்தங்கள் வந்துள்ளன. ஒப்பந்தங்கள் ஏற்படுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. அந்த ஒப்பந்தங்கள் ஆழமாக ஆராயப்பட வேண்டும். ஒப்பந்தத்தின் பலன், எதிர்காலம் ஆகியன குறித்து ஆராய வேண்டும்.

ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டதே என்பது குறித்து கருத்துக் கூறமுடியாது. அவை நடைமுறையில் வர வேண்டுமே.

வெளிநாட்டுப் பிரதமருக்கும், எமது நாட்டு ஜனாதிபதிக்கும் இடையில் உருவான ஒப்பந்தத்தையே நடைமுறைப்படுத்தப்பட முடியாது போனது.

ஒப்பந்தங்கள் ஏற்படலாம். அவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## நம்பிக்கை தீர்மானம் குஜ்ரால் அரசு வெற்றி

### எட்டு மணி நேரம் விவாதம்

புதுடில்லி, ஏப். 23

நேற்று முன்தினம் இந்தியாவில் பதவி ஏற்ற ஐ. கே. குஜ்ராலின் அரசு நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

நம்பிக்கை வாக்கெடுப்பின் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் 8 மணித்தியாலங்கள் இடம்பெற்று நேற்றிரவு 9.30 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் வாக்குகள் மூலம் குஜ்ராலின் அரசுக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

இதனை அடுத்து நாடாளுமன்றம் இம் மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ-10)

## முச்சந்தி முரளி



அப்ப அந்த இரண்டு கப்பல்களுக்கும் நல்ல காலம் இருந்திருக்கு போல...!

## கோணேசர் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

திருகோணமலை, ஏப். 23

கோணேசர் ஆலயத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சம்புரோச்சன மகாதோஷ பரிகார கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

ஆலயத்தின் முன்னாள் பூசகரின் மனைவியின் சடலம் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டதை அடுத்து, இந்தக் கும்பாபிஷேகம் இடம்பெறுகிறது.

"பிரதிஷ்டா சிவாகம ஞானபானு" நயினை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் பற்றிய விசாரணை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் நாளைமுதல் 3 நாள்கள் பலாலியில் இடம்பெறவிருக்கின்றன.

இந்த விசாரணைக்குச் சமுகம் கொடுக்குமாறு அழைக்கப்பட்டவர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட திகதிகளில்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரை

## பதுங்கு குழிகள் அமைப்பதில் புலிகள் தீவிரமாக ஈடுபாடு

கொழும்பு, ஏப். 23

ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரை பதுங்கு குழிகள் அமைப்பதில் புலிகள் தற்பொழுது தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

"சண்டே ரைம்ஸ்" பத்திரிகையின் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் பி.பி.ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் இருந்து கால்நடைகள் யாழ்ப்பாணம் கொண்டுவர முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 23

குடாநாட்டில் கால்நடை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு இந்தியாவில் இருந்து நல்லின ஆடு, மாடுகளை நேரடியாக கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிதி உதவியுடன் இவற்றை இங்கு எடுத்து வருவதற்கான பேச்சுக்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து 50 நல்லின மாடுகளையும், 50 நல்லின ஆடுகளையும்எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவற்றை கப்பல் மூலம் கொழும்பில் இருந்து கொண்டு வந்து சேர்ப்பது தொடர்பான நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக அந்த முயற்சி பின்னர் கைவிடப்பட்டது.

அதனையடுத்து இந்தியாவில் இருந்து முதற்கட்டமாக 100 கால்நடைகளை இங்கு எடுத்து வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கும்படி யாழ்.கால்நடைஅபிவிருத்தித் திணைக்களம் சம்பந்தப்பட்ட தரப்பினர்களைக் கேட்டுள்ளது. (ஐ-3)

## சிங்மய பாரதி வித்தியாலய

# புலமைப் பரீட்சைப் பெறுபேறு 3மாதங்களின் பின் கிடைத்தது

வலிகாமம் தெற்கு, ஏப்.23

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் மூன்று மாதங்களின் பின்னர் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன,

1996ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த ஜனவரி மாதத்தில் வெளியாகிய போதிலும் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலை மாணவர்களின் பெறுபேறுகள் கிடைக்கப் பெறாமல் இருந்தன.

பாடசாலை அதிபர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக மூன்றுமாத கால தாமதத்தின் பின்னர் தற்போது பரீட்சை முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பரீட்சை முடிவுகளின்படி எஸ். தனேசன் (159 புள்ளி), வி. சுகன்யா (128 புள்ளி). ஜி. சிவதர்சினி (113 புள்ளி), ஆர். ஜனாத் (123 புள்ளி), ரி. சந்திரகுமார் (106 புள்ளி) ஆகிய ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (ஐ-152)

## கலந்துரையாடல்

மூன்றாண்டு கால செயற்றிட்டத்தின் கீழ் உடுவில் கல்விக் கோட்டத்தில் உடற் கல்விப் பாடத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ஐ-152)

## யாழ். மாணவர் குழு திருமலை வந்தது

திருகோணமலை, ஏப். 23

யாழ்ப்பாணத்தில் இருந்து கல்விச்சுற்றுலா மேற்கொண்டுள்ள 20 மாணவர்கள் கொண்டகுழு நேற்றுக்காலை 11 மணியளவில் கப்பல்மூலம் திருகோணமலை வந்து சேர்ந்தது.

திருகோணமலை உதவி அரசாங்க அதிபர் வேலும்மயிலும் இக்குழுவை வரவேற்றார்.

அதைத்தொடர்ந்து பொலீஸ் பாதுகாப்புடன் இக்குழு அநுராதபுரம் சென்றது.

அங்கிருந்து கொழும்பு, மாத்தறை, நுவரெலியா பகுதிகளுக்கு இக்குழு சென்று அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து யாழ்.மாணவர்களின் கல்விப்பாதிப்புக் குறித்து விளக்கும். (இ-3-150)

# 2 கப்பல்களில் 790 பயணிகள் இன்று திருமலை பயணம்

யாழ்ப்பாணம், ஏப். 23

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று 790 பயணிகளுடன் இரு கப்பல்கள் புறப்பட இருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

'சஜிந்த்' கப்பலில் 500 பயணிகளும், 'தாரகி' கப்பலில் 290 பயணிகளும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால்! சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 544 முதல் 560 வரையுள்ளவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)


## தேவை

ஒலிப்பதிவு செய்யக் கூடிய வானொலிப்பெட்டி
(TWO - IN - ONE RADIO)
உடன் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## பயிற்சி வினாத்தாள்கள்

(விடைகளுடன்)

3, 4, 5, 6, 7, 8, 9, 10. O/L
வ தப்புகளுக்கான

மாதாந்த (April) பயிற்சி வினாத்தாள்கள் (எல்லாப் பாடங்களுக்கும்) எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைப் பகுதி **BOND Institutes**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(46498)


## கண்ணீர் அஞ்சலி

யா/ வதிரி, திருஇருதயக்கல்லூரியின் எழுதுவினைஞராக கடமையாற்றும்
**திருமதி உருத்திரராஜா சரஸ்வதி**
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி
**மயில்வாகனம் செல்வரட்னம்**
அவர்கள் அமரத்துவமடைந்த செய்தி கேட்டு துயருறுகின்றோம்.எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
**யா/வதிரி,திருஇருதயக் கல்லூரி, கரவெட்டி.**
(சி/601)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 02 — 05 — 1948
உதிர்வு: 04 — 05 — 1996

**திருமதி ஐயாத்துரை சரசு**

பண்பின் சிகரமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
கடமைக்கோர் எடுத்துக்காட்டாய்,
எம்மை எல்லாம் வழி நடத்திய
பெருந்தகையே! திடீரென எம்மை விட்டுப்
பிரிந்தனையோ? யுகங்கள் பல சென்றிடினும்
உந்தன் நினைவு எம் மனதை விட்டு
என்றுமே நீங்காது] நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,நண்பர்கள்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
நம்பாப்புலம்,
அராலி.
(46703)

## பிறந்த நாள் வாழ்த்து

**தேவராஜா ஜேம்ஸ் தேவசேயன்**

காரைநகரைச் சேர்ந்த
**திரு. திருமதி தேவராஜா விஜயலக்சுமி**
தம்பதிகளின் ஏகபுத்திரன் ஜேம்ஸ் தேவசேயன் (தம்பா) 7ஆவது பிறந்த நாளை இன்று **23-04-97**இல் தனது இணுவில் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார். அத்தான்மார், அண்ணாமார், தம்பிமார், தங்கைமார் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாய் வாழ வாழ்த்துகின்றனர்.

-சித்தப்பாமார்.

குருமனை,
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(சி/602)


உ
சிவமயம்

# விவாஹ சோபன அழைப்பு

**அன்புடையீர்!**

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் ஈசுவர வருஷம் சித்திரை மாதம் 10 ஆம் நாள் புதன்கிழமை (**23–04–1997**) சுவாதி நக்ஷத்திரமும் சித்தயோகமும் சேர்ந்த காலை 8.06 முதல் 9.42 மணிவரை வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்,

எமது ஜ்யேஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
**ரமேஷிற்கு**
Accountant, Estee & Sons



எமது ஜ்யேஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**சாந்தியை**
Faculty of Arts, University of Peradeniya.

பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் கன்னிகாதான, மாங்கல்யதாரண. பாணிக்கிரஹணம் நிகழ்த்த இறைவன் திருவருளை முன்னிட்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராய் சமுகம்தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: 23-04-1997 அதிகாலை 5 மணிக்கு, 155/ 2A காலிவீதி, தெஹிவளை.
வரவேற்புபசாரம்: மாலை 5 மணி தொடக்கம் 8. 30 மணிவரை
49/2 லோரன்ஸ் வீதி, கொழும்பு - 04

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

சிவஸ்ரீ. செ. பரமானந்தக் குருக்கள்
ப. பங்கஜவல்லி
1 ஆம் கட்டையடி, கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

பிரம்மஸ்ரீ இ.சோமாஸ்கந்த சர்மா
சோ. ஜெகதீஸ்வரி
49/ 2, லோரன்ஸ் வீதி
கொழும்பு - 04.

**வரவேற்பாளர்கள்:**
பிரம்மஸ்ரீ சி. தியாகராஜ ஐயர்
சிவஸ்ரீ பா. சிற்சபேசக் குருக்கள் தம்பதிகள் (மணிஐயர்)
(இரு வீட்டார் அழைப்பு)
(46499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சேவையில் உள்ளவர்களை நிர்வாகத்தில் ஈடுபடுத்த எதிர்ப்பு

## அரச லிகிதர் சேவைச் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 23

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு கோட்டக் கல்வி அலுவலகங்களில் நியமிப்பதை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் யாழ்.கிளை வன்மையாகக் கண்டித்துள்ளது.

நிர்வாக சேவையில் ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்தப்பட்டுள்ளது. இணைந்த சேவைகளைச் சார்ந்த அலுவலர்கள் அதே சேவைகளில் அல்லது அகில இலங்கைச் சேவைகளில் பதவி நிலைத்ததை அதிகாரிகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் அவர்களின் பணிப்புரைகளுக்கும், வழிகாட்டலுக்கும் அமையச் சேவையாற்றுவதே மரபாகும். கல்வித் திணைக்களத்தைப் பொறுத்த வரையில் இந்த நிலைப்பாடு முரண்படுகின்றது.

இப்படி அந்தக்கிளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தூதுக்குழு ஒன்று மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளருடன் பேச்சு நடத்தியுள்ளது என்றும் —

இவ்விடயத்தை மீளாய்வு செய்து மாற்று ஒழுங்கு ஒன்றை ஏற்படுத்துவதாக அவர் உறுதி அளித்துள்ளார் என்றும் — அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ். கிளைச் செயலாளர் இ. தவராசா தெரிவித்தார். (இ-3)

# கால்நடை அபிவிருத்திநிலையங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை துரிதமாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 10 கிராமிய கால்நடை அபிவிருத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோண்டாவில், அராலி, உரும்பிராய், மானிப்பாய், அளவெட்டி, உடுப்பிட்டி, மருதங்கேணி, கொடிகாமம், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய இடங்களிலேயே இவை அமைக்கப்பட்டுள்ளன.

கால்நடை நோய் தடுப்பு, செயற்கை முறைச் சினைப்படுத்துதல், அவசர, ஆரம்ப முதலுதவிச்சிகிச்சை, பசுத்தீவன அபிவிருத்தி ஆகிய பணிகளை இந்த நிலையங்கள் மேற்கொள்ளும்.

இந்த நிலையங்களில் பணியாற்ற தெரிவு செய்யப்பட்டு 2 மாத காலபயிற்சி அளிக்கப்பட்ட 20 பேர் கால்நடை அபிவிருத்தி உதவியாளர்களாக இந்த நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

கால்நடை வளர்ப்பு தொடர்பாக விசேட பயிற்சி பெற்ற இவர்களுக்கு கடந்த வியாழக்கிழமை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் சான்றிதழ்களைவழங்கினார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையங்களுக்கு நியமனம் பெற்றுள்ளவர்கள் இந்த நிலையங்களுக்கு கிடைக்கும் வருமானத்தில் சம்பளத்தை பெறுவர். (இ-3)

## செயலகத்தில் இயங்கும்

# அடையாள அட்டைவழங்குப்பிரிவு மேலும் ஒரு மாதம் இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். செயலகத்தில் இயங்கும் விசேட அடையாள அட்டை வழங்கும் பிரிவு மேலும் ஒரு மாதம் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின் கீழ், செயலகத்தில் இயங்கிய இந்தப் பிரிவு தனது பணியை இம் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறுத்தும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

குடாநாட்டில் உள்ள சகலருக்கும் அடையாள அட்டை வழங்கி முடிக்கப்படாததாலும் —

மேலும் குடாநாட்டுக்கு மக்கள் வந்து கொண்டிருப்பதாலும் — இந்தப் பிரிவின் பணியை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

விசேட அடையாளஅட்டை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படுவது இம் மாதம் 12ஆம் திகதியுடன் நிறுத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித்திகதி அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பிரிவு அடுத்தமாதம் 31ஆம் திகதியுடன் மூடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட கோழிக் குஞ்சுகள் விநியோகம்

குடாநாட்டில் கோழி வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக கொழும்பில் இருந்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் இதுவரை எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இப்படி கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள வடக்கு உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி ஜி. சிவபாலசுந்தரம் தெரிவித்தார்.

கடந்த வருடம் 70 ஆயிரம் கோழிக்குஞ்சுகளும், இவ் வருடம் முதல் மூன்று மாதங்களில் 33 ஆயிரத்து 945 முட்டைக்கான குஞ்சுகளும், 14 ஆயிரத்து 157 இறைச்சிக்கான குஞ்சுகளும் எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

கோழி வளர்ப்பவர்களிடம் இருந்து முட்டையைக் கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் திட்டம் ஒன்றுகால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் —

இதன் காரணமாகமுட்டை விலை பெரியளவில் வீழ்ச்சி அடையாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# யாழ். ஆஸ்பத்திரியில் சனியன்று எக்ஸ்-றே பிரிவு ஸ்தம்பித்தது

## வைத்திய சேவைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். போதனாவைத்தியசாலையின் ''எக்ஸ்-றே'' பிரிவு கடந்த சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை இயங்காமல் இருந்ததால் பல நோயாளிகளுக்கு எக்ஸ்-றே எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையால் வைத்திய சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

எக்ஸ்-றே பிரிவில் பணியாற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் திடீரென கடமைக்கு வராதிருந்தமையாலேயே இந்நிலை ஏற்பட்டது.

ஸ்தம்பித நிலையை அவதானித்த ஆஸ்பத்திரி நிர்வாகம் உடன் நடவடிக்கையை மேற்கொண்டு கடமைக்குச் சமுகமளிக்காதிருந்த தொழில் நுட்பவியலாளருடன் தொடர்பு கொண்டு அவர்களைக் கடமைக்கு வரும்படி அழைத்தது. அதன் பின்னர் நண்பகல் 12 மணியில் இருந்து எக்ஸ்-றே எடுக்கும் பணி நடைபெற்றது.

''எக்ஸ்-றே'' பிரிவில் கடமையாற்றும் தொழில் நுட்பவியலாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதே இதற்கானகாரணம் எனத் தெரிய வந்தது.

14 தொழில் நுட்பவியலாளர் கடமையாற்றிவந்த ''எக்ஸ்-றே'' பிரிவில் தற்போது மூவர் மாத்திரமே பணிபுரிகின்றனர். இதிலும் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கிறார்.

இதனால் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ள இக்காலவேளையில் வைத்திய சேவையை ஒழுங்காக மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் இதனால் வைத்திய சேவைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாகவும், கடமையாற்றும் தொழில் நுட்பவியலாளர் தமது தேவைகளைப் பொறுத்து லீவு எடுக்கமுடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தற்போது பகிரங்க விடுமுறை வார விடுமுறைகளில் கடமையாற்றுவதற்கான மேலதிகப்படி தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் இந்நாள்களில் கடமை செய்வதில் சில தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் இப்பிரிவு அடிக்கடி ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

# அமோனியம் சல்பேற் உரம் மண் கலக்காது வழங்கப்படும்

## தற்போதைய நடைமுறை நீக்கப்படும்

அமோனியம் சல்பேற் உரத்தை மண்ணுடன் கலந்து விவசாயிகளுக்கு வழங்கும் நடைமுறை நிறுத்தப்படவிருப்பதாக யாழ். அரசஅதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

அமோனியம் சல்பேற்உரத்தைப் பெறும் விவசாயிகள் மண்ணை எடுத்து வர வேண்டும்.

அந்த மண்ணை உரத்துடன் கலந்து உரத்தை வழங்கும் நடைமுறையே தற்போது அமுலில் உள்ளது.

இது தொடர்பாக யாழ். அரச அதிபர் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதன் பேரில் இனிமேல் அமோனியம் சல்பேற் உரம் மண் கலக்கப்படாமல் நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்படவிருக்கிறது. (இ-3)

## விலை உயர்வு

குடாநாட்டில் தேங்காய் எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

ஒருபோத்தல் 40 ரூபாவாக விற்கப்பட்டு வந்த தேங்காய் எண்ணெய் தற்போது 60 ரூபாவாக விற்கப்படுகிறது.

உள்ளூரில் கொப்பறாத் தேங்காய் கிடைக்காமையினாலும், கொழும்பிலிருந்து தேங்காய் எண்ணெய்எடுத்து வரப்படாததினாலுமே இவ் விலை உயர்வு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கொளுத்தும் வெயிலுக்கு ஒதுங்கிட நிழல் இல்லாத வீதிகள்

# யாழ். குடாநாட்டில் 10மணிக்கு மேல் பயணம் அவஸ்தை!

### கு.சி. சுந்தரம்பிள்ளை

### செய்திக் கட்டுரை

கொடியது எது என ஔவைப் பிராட்டியாரிடம் முருகன் கேட்க அன்பில்லாத மனைவி உணவு படைக்க அதனை உண்பதே உலகில் மிகமிகக் கொடியது என அவர் கூறியதாக இலக்கிய வரலாறு இயம்புகிறது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஔவைப் பிராட்டியார் வாழ்ந்திருந்தால் நிச்சயம் தமது கருத்தை மாற்றி குடாநாட்டு வீதிகளில் பயணஞ் செய்வதே மிகக் கொடியது எனப் பதிலளித்திருப்பார். வெயிலின் கொடுமை அவ்வளவுக்குக் கடுமையாக உள்ளது.

சூரியன் இலங்கைக்கு நேர் உச்சியில் பவனி வருவதனால் பங்குனி, சித்திரை மாதங்களில் வெயில் கடுமையாக இருப்பது வழமையே. ஆயினும் இந்த ஆண்டு வேறு காரணிகளும் சேர்ந்து விட்டதனால் இது தாங்க முடியாதளவிற்கு இருப்பதை அவதானிக்க முடிகிறது.

வீதியின் ஓரங்களில் ஆங்காங்கே பாரிய விருட்சங்கள் இருந்தன. இவைகளின் கிளைகள் வீதிக்கு மேலாகப் பரந்து நிழல் பரப்பிக் கொண்டிருக்கும். அவ்வாறின்றி அமைந்திருந்த சிறிய மரங்களினைத் தழுவியபடி காற்று வீசியதனால், அதன் குளிர்மையில் வெயிலின் வெப்பம் ஓரளவு தணியும்.

வீதியில் பயணஞ் செய்யும் போது இடையிடையே மரங்களின் நிழல்கள் கைகொடுத்து உதவியதனால் ஒரேயடியாக வெயிலில் காயவேண்டிய அவசியம் இருக்கவில்லை. இதமான காற்றும் அடிக்கடி வீசியதனால் வெப்பத்தின் தாக்கம் உணரப்படவில்லை.

துவிச்சக்கரவண்டியிலோ, நடந்தோ பயணஞ் செய்யும் போது எதிரில் நெருக்கமான நண்பரையோ உறவினரையோ சந்தித்தால் ஒரு மரநிழலில் ஒதுங்கி நின்று அளவளாவிச் செல்லலாம். இன்று அப்படிச் செய்ய முடியாது. நடுவெயிலில் தான் நின்று குசலம் விசாரிக்க வேண்டும். இரண்டு வார்த்தைகள் கதைப்பதற்குள் துடிதுடித்து விடுவோம். ஆற இடமில்லை.

இவற்றுக்கெல்லாம் காரணம் வீதியோரங்களில் இன்று மரங்கள் இல்லாமையே. பெரிய விருட்சங்களின் கிளைகள் வெட்டப்பட்டுள்ளன. சிறிய மரங்கள் குறுக்கே தறிக்கப்பட்டுள்ளன. சிறியபனை கூட அரைவாசியில் வெட்டப்பட்டுள்ளது. வீதியிலிருந்து உட்பகுதிகளிலும் மரங்கள் வெட்டப்பட்டுள்ளன. சில இடங்களில் வாழைகள் கூட அழிக்கப்பட்டுள்ளன.

#### எங்கும் பரந்த வெளி

பக்கங்களில் பயிர் பச்சைகளோ இல்லாததனால் காற்று வெப்பமடைந்ததில் வியப்பில்லை. வீதியெங்கும் ஒரே பரந்த வெளியாகத் தோற்றமளிக்கிறது.

வாகனங்களின் போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களில் அவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகளின் தாக்கத்தினால் சூழல் வெப்பமடைவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்கும் இப்போதைய சூழ்நிலை அவ்வாறாகவே உள்ளது.

மேற்படி காரணிகளினால் வெப்பம் கடுமையாக உள்ளது. பகல் பத்து மணிக்கு மேல் பயணஞ் செய்ய முடியாதுள்ளது என மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள்.

மரங்களை வெட்டக்கூடாது எனவும் அதனால் சூழல் பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படும் எனவும் வெகுவாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. உலகளாவிய ரீதியில் ஜூன் மாதம் 5 ஆம் திகதி சூழல் பாதுகாப்புத் தினமாகக் கொண்டாடப்படுகிறது. தீவிரமாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் செயலளவில் நடப்பவை இவற்றுக்கு நேர்விரோதமானவையாக உள்ளன.

சாதாரண குடிமகன் ஒருவன் தனது வீட்டு வளவில் உள்ள குறிப்பிட்ட சில இன மரங்களைத் தறிப்பதானால் பிரதேச செயலரின் அனுமதி பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்னும் சில வகை மரங்களைத் தறிக்க அனுமதியில்லை. ஆனால் வீதியோரத்தில் நிற்கும் மரங்கள் இந்த அறிவுறுத்தல்களிலிருந்து விதிவிலக்குப் பெற்றவையா? ''ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்லடி கண்ணே'' என்பது போலவே உள்ளது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ரியூஷன்

O/L ஆங்கில இலக்கியம் படிப்பதற்கு தொடர்பு கொள்ளவும்: ஆ. இராசசிங்கம், 330 (474), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [46481]

### தேவை

தமிழ்/ ஆங்கில ஒலிம்பியா தட்டச்சு உடன் தேவை. வைத்திருப்போர் த. மோகன்ராஜ், அரசடி ஒழுங்கை திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (46482)

### வானொலி மஞ்சரி - ஏப்ரல் 1997

இன்றைய நேயர், இசை மழை, இசையும் கதையும், நினைவில் நிறைந்தவை, விடுமுறை விருப்பம் போன்ற நேயர்களின் தெரிவுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்வதற்கான கூப்பன்களுடன் விற்பனையாகின்றது பூபாலசிங்கம் புத்தகசாலை இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-530)

### விற்பனைக்கு

Yamaha Octa.Pad(Digital drump) Mo del DD - 50 Poloride Cameras, (Pass port Size,&I C size)என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. சிவநாதன், மூத்த விநாயகர் கோயிலடி, கரணவாய் கரவெட்டி. (46487)

யாழ். கச்சேரிக்கும் கல்விக் கந்தோருக்கும் இடையில் கச்சேரி நல்லூர் வீதியில் 94 ஆம் இலக்க வீடும், வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. V. ஜெயலிங்கநாதன் 126/29 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (46449)

### தவறிவிட்டது

தெய்வசேனா இராசரத்தினம் ஆகிய எனது அடையாள அட்டை 40762 2081 v நல்லூருக்கும், நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Merchant Finance 555, நாவலர் வீதியில் தொடர்பு கொள்ளவும். (46485)

கைலாசபிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவின் போது எனது பவுண் கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் சன். மானம் வழங்கப்படும். ச. இலங்கைநாதன் 639/1, நாவலர்றோட், யாழ்ப்பாணம். (46490)

### மணப்பெண் தேவை

யாழ். கத்தோலிக்க கௌரவ குடும்பம், 28 வயது நிரம்பிய கொழும்பிலுள்ள தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை, தொழில் பார்ப்பவர் விரும்பத்தக்கது. தொடர்பு:- மே/பா, இல. 610, 'உதயன்' யாழ்ப்பாணம். (46463)

## வைத்திய சேவை

**Dr. சிவனடியான்**

கொழும்பிலிருந்து திரும்பி மீண்டும் தன் சேவையை ஆரம்பித்துள்ளார். காலையில் நவாலியிலும், மாலையில் ஆனைக் கோட்டையிலும் சிகிச்சையளிக்கப்படும்.

Dr. சிவனடியான்

(46471)

மந்திகை ஆஸ்பத்திரியில்

# 17 தொண்டர்களின் சேவை நிறுத்தம்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிற்றூழியர்களுக்கு உதவியாக தொண்டர் சேவையில் ஈடுபட்டிருந்த சுமார் 17பேரின் சேவை விலக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதினேழு தொண்டர்களும் கடந்த சில வருடங்களாக தொண்டர்சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களின் சேவையால் வைத்தியசாலையில் நிலவிய சிற்றூழியரின் ஆளணிப் பற்றாக்குறையை ஈடுசெய்யக் கூடியதாக இருந்தது.

கடந்த காலங்களில் இவ் வைத்தியசாலையில் தொண்டர் சேவையில் ஈடுபட்டிருந்த பலர் பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தால் தொழிலாளியாக சிற்றூழியர் சேவையில் சேர்க்கப்பட்டிருந்தனர். (இ-118-173)


## உதயம்

**பொருள்கள் வாடகைக்குக் கொடுக்குமிடம்**

பீங்கான், ரம்ளர், தண்ணீர் ரம்ளர், கறிவாளிகள், கறி டிஸ், பிளாஸ்ரிக் ப்ரய்கள், தண்ணீர் பைவர், பந்திப் பாய், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், ஐஸ்கிறீம் கப்ஸ்,


**இன்னும் பல.**

**உதயம்**

**178, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(46480) (வெள்ளை மாளிகை அருகில்)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 — 08 — 1901 | 25 — 03 — 1997 |

அமரர்

**வேலுப்பிள்ளை பொன்னம்பலம்**

(நயினை நாகபூஷணி அம்பாள்தேவஸ்தான பரம்பரை அறங்காவல்சபை முன்னாள் உறுப்பினர்)

எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் 24 - 04 - 97 [வியாழன்] எமதில்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
செல்வி பொ. கௌரியம்மை,
திருமதி பரமேஸ்வரி இராசலிங்கம்.

1 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (46484)

## 31 ஆம் நாள் அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு;



உதிர்வு 26 — 03 — 1997

**அமரர் சின்னையா பொன்னுத்துரை**

26-3-1997 புதன்கிழமை சிவபதம் எய்திய பனிப்புலம், பண்டத்தரிப்பை பிறப்பிடமாக கொண்ட நேவி- பொன்னுத்துரை அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியங்கள் அமரரின் இல்லத்தில் 25-4-97 வெள்ளிக்கிழமை காலையில் நடைபெறும்.

அத்தருணம் அன்பர்கள் அனைவரும் சமுகந்தந்து கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக உதவும் படிக்கு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:
[illegible]

பனிப்புலம்,
பண்டத்தரிப்பு. (46477)

# கோழிப்பண்ணையில் துப்பாக்கிகள்

கொழும்பு, ஏப். 23

கடுவெல கொத்தலாபுர கிராமத்தில் கோழிப் பண்ணை ஒன்றில் இருந்து மூன்று புதிய துப்பாக்கிகளை களனிப் பொலீஸார் கைப்பற்றினர்.

பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்டு, கிறீஸ் பூசப்பட்ட நிலையில் அத்துப்பாக்கிகள் இருந்தன என்றும்—

துப்பாக்கிகளின் இலக்கத்தை அழிக்க முயற்சி எடுத்ததற்கான அடையாளம் அதில் காணப்பட்டது என்றும்—பொலீஸார் தெரிவித்தனர்.

நவசமசமாஜக் கட்சியின் தொழிற்சங்க கட்டடத்தில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து கைதான அந்த தொழிற்சங்க முக்கியஸ்தரான அஜித் திஸநாயக்க கொடுத்த தகவலை அடுத்தே இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர். (இ-3-150)

# 2 ஆவது கல்விச் சுற்றுலா

1996 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் 2 ஆவது கல்விச் சுற்றுலா விரைவில் ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

இப்பரீட்சையில் 4 ஏ சித்தி அடைந்த மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா நேற்று ஆரம்பமானது.

நேற்றுக் காலை காங்கேசன்துறையில் இருந்து இவர்கள் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டனர்.

இந்தப் பரீட்சையில் 4 ஏ, 3 ஏபி, 3ஏசி, 2ஏ2பி சித்தி அடைந்த மாணவர்களைக் கொண்ட 2 ஆவது கல்விச் சுற்றுலா ஆரம்பமாகவிருக்கிறது.

இந்த சுற்றுலாவில் செல்ல தகுதி பெற்ற முதலாவது சுற்றுலாவில் சேர்க்கப்படாத — மாணவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ் கல்வி வலயம் ஒன்றுக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளது. (இ-3)

# தென்மராட்சிப் பகுதி வங்கிகளில் படிவங்கள், பாஸ்புத்தகம் இல்லை

தென்மராட்சி, ஏப். 23

தென்மராட்சிப்பகுதி வங்கிகளில் பணம் வைப்பிலிடும் படிவம், பாஸ்புத்தகம் உட்பட பல வங்கிப் படிவங்கள் இல்லாததால் வங்கிகளில் வாடிக்கையாளர்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதம் இப்படிவங்கள் கப்பலில் அனுப்பப்பட்ட போதிலும் அவை இன்னமும் வந்து சேரவில்லை என்று கூறப்படுகிறது. (இ-117)

# உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளிடையே போட்டி

வலி—தெற்கு, ஏப். 23

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரபந்தாட்ட, வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகின்றன.

பதினேழு வயது, பத்தொன்பது வயதுப் பிரிவினருக்கான இவ்விரு வகைப் போட்டிகளும் 29 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

கரபந்தாட்ட இறுதிநிலைப் போட்டிகள் 29 ஆம், 30ஆம் திகதிகளிலும் —

இறுதிப் போட்டிகள் மே மாதம் 5 ஆம் திகதியும் — நடைபெறும்.

வலைப்பந்தாட்ட இறுதி நிலை போட்டிகள் ஏப்ரல் 30 ஆம் திகதி முதல் மே மாதம் 3 ஆம் திகதி வரையும் நடைபெற்று இறுதிப் போட்டிகள் மே 6 ஆம் திகதி நடைபெறும்.

கரப்பந்தாட்ட போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிமைதானத்திலும், வலைப்பந்தாட்டப் போட்டிகள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்திலும் நடைபெறும்.

போட்டிகள் யாவும் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும். (இ-152)

# 5,722 தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ஆயிரத்து 725 பாடசாலைகளில் 5 ஆயிரத்து 722 தமிழ் பொழி மூல ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

இவ்வாறு ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இந்த 5 ஆயிரத்து 722 வெற்றிடங்களில் 3 ஆயிரத்து 802 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து நாளை நாடாளுமன்றத்தில் அவர் கேள்வி எழுப்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

**பழைய மாணவர் சங்கம்**

## பொதுச்சபைக் கூட்டம்

**தலைவர்: திரு. வே. நாகராசா B.Sc. அவர்கள்**
**இடம்: கல்லூரி மண்டபம்.**
**காலம்: 27 - 4 - 97 (ஞாயிறு) மு. ப. 9. 30 மணி**
(இலங்கை நேரம்)

பிரதம விருந்தினர் :-
**உயர்திரு. கா. சந்திரராசா அவர்கள்**
(பிரதேச செயலர் / மேலதிக அரச அதிபர் வலி. மேற்கு பிரிவு, சங்கானை).
(கல்லூரியின் பழைய மாணவர்)

அங்கத்தவர்களை தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

புதிய அங்கத்தவராகச் சேர விரும்புவோர் உறுப்புரிமைப் பணத்தைச் செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ந. சிவரஞ்சன்,**
கௌரவ செயலாளர்.

(46483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தம் சேமித்து வைக்கும் வசதி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இல்லை

## உபகரணங்களை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 23

''கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இரத்தம் சேமித்து வைப்பதற்கு வசதியில்லை. அங்கு இரத்தத்தைச் சேமித்து வைப்பதற்கு அவசியமான உபகரணங்கள் அவசரமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.''

கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். விக்கினேஸ்வரன், கிளிநொச்சி — வவுனியா மாவட்டங்களில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

குருதிச்சோகையின் காரணமாக பாதிக்கப்பட்ட பல நோயாளிகளுக்கு இரத்தம் வழங்க வேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதற்காக இரத்தத்தைச் சேமித்து வைக்கக்கூடிய வசதிகள் இல்லை என்றும் அவர் கூறினார்.

இரத்தத்தைச் சேமித்து வைத்து அவசர தேவைகளின் போது நோயாளிகளுக்கு வழங்க முடியாத நிலைமை காரணமாக கடந்த மூன்று மாதங்களில் மட்டும் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைகளில் 22 நோயாளிகள் உயிரிழந்துள்ளனர்.

இரத்தத்தைச் சேமித்து வைக்கக்கூடிய வசதி இருந்திருக்குமானால் அந்த நோயாளிகளைக் காப்பாற்றியிருக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இறந்தவர்களில். இருவர் பிரசவத்துக்காக வந்திருந்தவர்கள். ஏனையோர் குருதிச்சோகை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தவர்கள்.

வன்னியில் இரத்தத்தைச் சேகரித்து வைப்பதற்குரிய இரத்த வங்கியும் அதற்கான வசதிகளும் இல்லாத அவல நிலை நீடிக்கிறது.

ஆனால் வவுனியாவில் இரத்தவங்கி உள்ளது. எனினும் இரத்தத்தைப் பெறமுடியாதநிலைமை நிலவுவதாக வவுனியா மருத்துவச்சங்கச் செயலாளர் டாக்டர் ஏ. கேதீஸ்வரன் கூறினார்.

(இ-5)

## உதயன்

### புதிய முயற்சி செய்ய வேண்டும்

உள்ளூராட்சி மன்றப் பிரிவு தோறும் சூழல் பாதுகாப்பு அலகுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய முயற்சி மிகவும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

சூழல் பாதுகாப்பு இன்றைய மனித வாழ்க்கையில் ஒரு முக்கிய தேவையாகி விட்டது. சுமார் பத்து அல்லது பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது சூழல் பாதுகாப்பில் அதிக அக்கறை காட்டப்படுகிறது. சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் பணிகள் சர்வதேச மட்டத்தில் பெரும் எடுப்பில் நடைபெற்று வருகின்றன.

இயற்கை வளங்களை மனிதன் கண்டபடி சீண்டிச் சீரழித்ததாலும் சூழலைப் பாதுகாப்பதில் பெரிய அளவில் செயல்ரீதியாகக் கரிசனை காட்டாததாலுமே பூமியின் இயக்கச் சமன்பாடு பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் பூலோகத்தின் ''உயிர்'' ஊசலாடும் ஆபத்து விரைந்து கொண்டிருக்கிறது. மனிதன் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களும் பொசுங்கிக் கருகும் பேராபத்தும் தலை நீட்டுகிறது.

அபிவிருத்தி, விஞ்ஞான வளர்ச்சி, நவீன தொழில் நுட்பங்கள் என்பவற்றின் பேரில் அல்லது அவற்றின் மீது கொண்ட அளவுக்கு அதிகமான மோகத்தினால் மனிதன் சூழலை, இயற்கையை, அதன் வனப்புகளை,வளங்களைச் சுரண்டியதால், சூறையாடியதால் இந்தப் பேராபத்து நிலை தலையெடுத்துள்ளது.

தேச மட்டங்களில் சூழல் பாதுகாப்புக்கெனச் சீர்செய் கொள்கைகள் வகுக்கப்பட்டு அவற்றை அனுசரித்துச் செயற்படு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அவை வெற்றி அளிக்க வேண்டுமாயின் சூழல் பாதுகாப்பு அடி மட்டங்களில் அக்கறையுடனும் தகுந்த முறையிலும் நடைமுறையாக வேண்டும். அந்தந்தப் பகுதிகளில், கிராமங்களில், சிறு நகரங்களில் உள்ள இயற்கை வளங்களைப் பேணவும், சுற்றுப்புறச் சூழல் மாசடைவதைத் தடுக்கவும் மக்கள் மட்டத்தில் அவர்களின் பங்களிப்போடு செயலாற்றுவது அவசியம்.

காடழித்தலைத் தடுத்தல், நீர் நிலைகள் மாசுறாது பார்த்துக் கொள்ளுதல், வளியின் தூய்மையைப் பேணுதல், மண்வளத்தைச் செழிப்புறச் செய்தல், மண் அரிப்பைத் தடுத்தல், சதுப்பு நிலத்தை மேம்படுத்திப் பயன்படுத்துதல், நீரோடும் வாய்க்கால்களைச் சீர் செய்து பேணுதல் கடல் அரிப்பைத் தடுந்தல், மழை நீரைத் தேக்குதல், மரம் தறித்தலைத் தடுத்து மர வளர்ப்பை ஊக்குவித்தல், மிருகங்கள், பறவைகள் மற்றும் உயிரினங்களை மனம் போன போக்கில் அழித்தலைத் தடுத்தல் போன்ற பணிகள் கிராம மற்றும் சிறு நகர மட்டங்களில் செய்யப்பட்டால் அவை தக்க பயனைத் தரும்.

உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளில் அமைக்கப்படும்சூழல் பாதுகாப்பு அலகுகள், அந்தந்தத்துறை சார்ந்த மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டால் நிறைந்த பயன் கிடைக்கும்.

### கோட்டக்கல்வி அலுவலர்

யாழ்ப்பாணம், ஏப். 23

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய ஆ, கமலநாதன் தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அலுவலகத்துக்கு கோட்டக்கல்வி அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(இ)

### அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 23

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

(இ)

# இனவாதக்கட்சிகளை ஓரங்கட்டவே சந்திரிகா-ரணில் உடன்பாடு

## ஐ.தே. கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஏப். 23

சிறு குழுக்களாக இயங்கும் இனவாதக் கட்சிகளை ஓரங்கட்டி, அஷ்ரப், தொண்டமான் போன்ற சிறுபான்மை இனத் தலைவர்களின் கொட்டத்தை அடக்கவே இனப் பிரச்சினை தொடர்பான சந்திரிகா- ரணில் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டுள்ளது.

திகாமடுல்ல மாவட்ட ஐ.தே.கட்சி எம். பி. தயாரத்ன, அக்கரைப்பற்று ஐ.தே.க. மத்தியகுழு ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையகத்தில் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் ஐ. தே. க. அமோக வெற்றியீட்டியுள்ளது. அங்குள்ள தமிழ் மக்கள் ஐ. தே. க. மீதுவைத்துள்ள நம்பிக்கையே இதற்கு காரணமாகும். பெரும் தலைவரான தொண்டமானின் செல்வாக்குக் கூட அங்கு எடுபடவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தமக்கு கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இனவாத அரசியல் செய்கிறார்.

இப்பொழுது அவரது உண்மை வேடம் அம்பலத்துக்கு வந்து கொண்டிருக்கிறது. மக்களும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை நிராகரிக்கத் தொடங்கியுள்ளனர். இனவாதம் இனி நாட்டில் எடுபடாது. அஷ்ரப் தமது அதிகாரத்தை வைத்துக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறார்—

இப்படி அவர் மேலும் கூறினார்,

(இ-5)

# சங்கீத சபை நடத்தும் எழுத்து மூலப் பரீட்சை

## ஜூன் 7 ஆம் 8 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 23

வட இலங்கை சங்கீத சபை நடத்தும் சங்கீத பாடங்களுக்கான எழுத்து மூல பரீட்சைகள் கொழும்பு உட்பட இலங்கை முழுவதிலும் உள்ள பல்வேறு நிலையங்களில் எதிர் வரும் ஜூன் 7 ஆம் 8 ஆம் திகதிகளில் நடைபெறும் என சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமையாக இப்பரீட்சை தொடர்பான செய்முறைப் பரீட்சைகள் முதலிலும் பின்னர் அதனைத் தொடர்ந்து எழுந்து மூலப் பரீட்சைகளும் நடக்கும்.

ஆனால் இம்முறை —

யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு வழமையான படி முதலில் செய்முறைப் பரீட்சைகளும் பின்னர் எழுத்து மூலப் பரீட்சைகளும் நடைபெறும் அதேசமயம் —

வெளிமாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு முதலில் எழுத்து மூல பரீட்சைகளும் பின்னர் செய்முறைப் பரீட்சைகளும் நடை பெறவிருக்கின்றன.

யாழ். மாவட்டப்பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் தற்போதைய முதலாம் தவணை பாடசாலை விடுமுறையின் போது நடைபெற்று இன்று இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

யாழ். மாவட்டம் மற்றும் வெளிமாவட்ட பரீட்சார்த்திகள் அனைவருக்குமான எழுத்து மூல பரீட்சைகள் ஜூன் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் ஒரே சமயத்தில் நடைபெறும்.

அதன் பின்னர் வெளிமாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் அந்தந்த இடங்களில் இரண்டாம் தவணை விடுமுறையின் போது நடைபெறும்.

வெளி மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான— எழுத்து மூல மற்றும் செய்முறைப் பரீட்சைகளுக்கான — அனுமதி அட்டைகள் மே இரண்டாம் வாரத்தில் அஞ்சலில் இடப்படும்.

சங்கீத சபை வட்டாரங்கள் இவ்வாறு மேலும் தகவல் வெளியிட்டன.

(உ)

# யாழ். வர்த்தகர்களுக்கு வணிகர் மன்றம் அறிவுறுத்தல்

வியாபாரத்தலங்களில் கடமையாற்றும் தொழிலாளர்களின் விடுமுறைகள், மேலதிக கொடுப்பனவுகள் ஆகியன தொடர்பாக யாழ். வணிகர் மன்றம் சில அறிவுறுத்தல்களை வர்த்தகர்களுக்கு விடுத்துள்ளது.

அந்த அறிவுறுத்தல்கள் வருமாறு:-

★ வியாபாரத்தலங்களில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு சனிக்கிழமை அரைநாளும், ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் விடுமுறை வழங்க வேண்டும்.

★ அரசாங்க வர்த்தக விடுமுறை நாள்களில் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும்.

★ விடுமுறை நாள்களில் பணியாற்றுவோருக்கு விடுமுறை நாளுக்கான விசேட கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

★ மேலதிக நேரவேலைக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்.

(இ-3)

# இலங்கை வங்கி காங்கேசன்கிளை திருநெல்வேலியில் இயங்கும்

இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக்கிளையை திருநெல்வேலியில் இயக்க இலங்கை வங்கி பிராந்திய அலுவலகம் நடவடிக்கைஎடுத்துள்ளது.

இக்கிளை காங்கேசன் துறையில் செயற்பட முடியாத காரணத்தால் யாழ். நகரப் பகுதியில் இயங்கிவருகிறது.

இக்கிளையை திருநெல்வேலி பலாலி வீதியில் கட்டடம் ஒன்றில் விரைவில் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான இடம்தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து அனுமதி கிடைத்ததும் புதிய இடத்தில் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3

### வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஏப். 25

சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்திரு பற்றிக்ஞானப்பிரகாசம் அடிகளார் தனது குருத்துவவாழ்வின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவை இம் மாதம் 27 ஆம் திகதி கொண்டாடுகிறார்.

(இ-172)

### கைதானோர் புலிகள் இயக்க ஆதரவாளராம்

கொழும்பு, ஏப். 23

புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப்படும் இரண்டுபேர் திருகோணமலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் புலிகளுக்குத் தேவையான பொருள்களை விநியோகித்து வந்தனர் என்றும் —

திருகோணமலைப் பகுதிகளில் விவசாயிகள் போல் நடமாடினர் என்றும் — படைவட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5)

### தெல்லிப்பளை விசேட அ. அட்டை

யாழ்ப்பாணம், ஏப். 23

தெல்லிப்பளை பிரதேச செயலக விசேட அடையாள அட்டை விநியோகம், தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

### புதிய அலுவலகத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஏப். 23

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு புதிய அலுவலகம் ஒன்று நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை இந்த பணிமனை பொறுப்பதிகாரியும், பதில் சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகருமான பொ. காசிநாதன் நேற்று நட்டார்.

(இ-3)

### கடல் அட்டைக்கு கிராக்கி

நெடுந்தீவு, ஏப். 23

தற்சமயம் கடல் அட்டைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளதால் வேலணைத் துறையைச் சேர்ந்த மீனவர்கள் கடல் அட்டை பிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வேலணை தெற்கு கடற்பகுதியில் பெருந் தொகையான மீனவர்கள் கடல் அட்டை பிடிப்பதற்காக தினமும் கூடுகின்றனர்.

(இ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து பிரச்சினைக்கு தீர்வுகாண உதவுவது

# தமிழகத்துத் தி. மு. க. அரசின் தார்மீகக் கடமை

இந்தியாவில் வெளியாகும் ''தினமணி'' பத்திரிகையில் ''ஈழப் பிரச்சினை: தமிழகத்தின் பொறுப்பு என்ற தலைப்பில் எஸ். எம். கார்மேகம் எழுதிய கட்டுரை இங்கே மறுபிரசுரமாகிறது.

ஈழத் தமிழரின் அரசியல், இன உரிமை அறப்போராட்டங்கள் ஆயுதப் போராட்டங்களாக திசைமாறிய பிறகு, அங்கு தமிழ் மக்கள் நித்தமும் செத்து மடியும் நிலை கடந்த 10 - 15 ஆண்டுகளாக நீடித்துக் கொண்டிருக்கிறது. இந்த அவல நிலைக்கு ஈழத்தமிழர் விஷயத்தில் இந்திய நடுவண் அரசின் அணுகுமுறைகளோ, தமிழர்களின் இன மொழி உணர்வுகளோ எவ்விதத்திலேனும் காரணமாக இருந்திருக்க முடியுமா? அவ்வாறெனின் அத்தமிழ் மக்களின் வாழ்வில் விடியல் தோன்ற நமது பணியும், பொறுப்பும், கடமையும் என்ன என்பதுதான் இன்று நமது கவனத்துக்கும் கவலைக்கும் சிந்தனைக்கும் உரிய அம்சங்களாக இருக்க வேண்டும்.

ஈழத் தமிழர் அரசியல் போராட்டங்களின் அனைத்து அம்சங்களையும் தமிழக மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஈழப் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகளும் தமிழக ஏடுகளும் அவ்வப்போது காட்டி வந்த அக்கறையும் ஆர்வமும்தான் இதற்கு பெரிதும் துணையாக இருந்திருக்கிறது.

பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே இலங்கை சொந்தம் என்று கொண்டாடிய சிங்களப் பேரினவாத சக்திகள் இலங்கையில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து, தனிச் சிங்களத்துக்கு மட்டுமே ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கியதும் இலங்கைத் தமிழரின் அரசியல் உரிமைப் போர் வேர் விடத் தொடங்கியது.

அந்தப் போராட்டத்துக்கு மறைமுகமாக நீர்வார்த்து, உரமூட்டியவை, தமிழகத்தில் தி மு. க. பரப்பிய இன, மொழி, உணர்வுகள் தான் எனலாம். அக்கால கட்டத்தில் சில தி. மு. க. தலைவர்கள் கூட இலங்கைக்குச் சென்று தமிழ் மக்கள் மத்தியில் இன, மொழி உணர்வுகளைத் தூண்டியமை, சிங்கள ஆட்சியாளர்களை விழிப்படையச் செய்தது. அதனால் இலங்கையில் தி. மு. க. பெரும் அரசியல் சக்தியாகத் தலையெடுக்க முடியாமல் நசுக்கப்பட்டுவிட்டது. என்றாலும் இன, மொழி உணர்வுகளின் அடிப்படையில் தமிழகத்துடன் ஈழத்தமிழர் உறவு நெருக்கமடைந்து வந்தது.

தமிழ் நாட்டில் தி. மு. க. 1967 இல் ஆட்சிக்கு வந்தது ஈழத்தமிழர் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது. அதனை ஒடுக்க அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் மேற் கொண்ட பல அடக்கு முறை நடவடிக்கைகள் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் விடுதலை வேட்கை உணர்வுக்கு வித்திடத் தவறவில்லை.

''மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி'' என்று தி. மு. க. கோரியதுபோல இலங்கைத் தமிழர் தலைவர்களும் ''தமிழ் மக்களின் பாரம்பரியத் (வட, கிழக்கு) தமிழ் மண்ணில் தமிழ் மக்களின் தேசிய இனசுயாட்சி, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து'' கேட்டு குரல்கொடுக்கத் துவங்கினர். அவர்களது அறப் போராட்டங்களை தமிழ் நாட்டில் தி. மு. க. ஏடுகள் வரவேற்று, ஆதரித்து உற்சாகப் படுத்தின. தி. மு. க. தலைவர்களின் ஆதரவைப் பெற ஈழத்தமிழர் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம், அ. அமிர்தலிங்கம் உள்ளிட்ட பலரைக் கொண்ட ஈழத் தமிழர் அரசியல் தூதுக்குழு 1972 பெப்ரவரியில் தமிழ் நாட்டுக்கு வந்தது. இக்குழு தமிழ்நாட்டின் பல பகுதிகளுக்கும் விரிவான சுற்றுப்பயணம் செய்து ஈழத்தமிழர் உரிமைப் போராட்டங்களைப் பற்றி விளக்கிப் பேசியது. தமிழக முதல்வர் மு. கருணாநிதி, ஆளுநர் கே. கே. ஷா, எம் ஜி. ஆர், காமராஜர், பக்தவத்சலம், காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் சாகிபு எனபல தலைவர்களையும், அரசியல் குழுக்கள், மாணவர் தலைவர்களையும் சந்தித்து ஆதரவு திரட்டியது.

சென்னை கோகலே மண்டபத்தில், அன்றைய மேயர்காமாட்சி ஜெயராமன் தலைமையில் ஈழத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பில் தங்களது தமிழக விஜயத்தின் நோக்கம் பற்றி ஈழத் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் விளக்கிப் பேசினார்.

''எந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சியோடும் தனிப்பட்ட உறவை வளர்த்துக் கொள்ள நாம் இங்கு வரவில்லை. ரத்தபாசத்தினால் பிணைக்கப்பட்ட ஒரே இனம் என்ற முறையில் தமிழக மக்கள், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் அவர்கள் மூலம் இந்திய அரசின் தார்மிக ஆதரவை நாடுகிறோம். மனித உரிமைகளுக்காக ஈழத் தமிழ்த் தேசிய இனம் விரைவில் துவங்கவிருக்கும் தர்ம யுத்தத்திற்கு ஆதரவு கோரி தமிழ்நாட்டுக்கு வந்தோம். இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை'' என்று அப்போது அவர் சொன்னார்.

அதன் பிறகு ஈழத் தமிழ்த் தலைவர்கள் மீது சிங்கள அரசு பல அடக்குமுறை நடவடிக்கைகளை ஏவிவிட்டது. 1974இல் பிரதமர் இந்திரா காந்தி இலங்கை சென்றிருந்தபோது அவரைச் சந்திக்கக்கூட இத்தலைவர்களை சிங்கள அரசு அனுமதிக்கவில்லை.

இதனால் ஈழத்தமிழர் போராட்டம் கடுமை அடையத் துவங்கியதும் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியும், அ.தி.மு.க. தலைவர் எம். ஜி. ராமச்சந்திரனும் போட்டி போட்டுக் கொண்டு அப்போராட்டத்துக்கு நேசக் கரம் நீட்டினர்.

கடல் கடந்து வாழும் தமிழ் மக்களின் கண்ணீர் துடைக்கின்ற காவல் தெய்வம் என்று ஈழத் தமிழ் மக்கள் நம்பிய தி.மு.க. ஈழத் தமிழர் போராட்டங்களுக்கு ஆதரவாக 1977-க்குப் பிறகு காரசாரமாகப் பல கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியது.

1983இல் இலங்கையில் தமிழர் இனப்படுகொலை செய்யப்பட்ட போது 27-8-1983இல் தி. மு. க. பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானம் வரலாற்றுச் சிறப்பிற்குரியது. ''அண்மையில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையை அடுத்து இலங்கைத் தமிழர், தமது பண்பாடு, மொழி, தனித்துவம், வாழ்வியல் முறை போன்றவற்றைப் பேணி ஒரே கொடிகளின் கீழ் வாழ்வதென்பது முடியாத காரியம். எனவே ஈழத்தமிழர் எதிர்நோக்குகின்ற பிரச்சினைக்கு தமிழீழம் ஒன்றே நிலையான தீர்வு எனப் பொதுக்குழு கருதுகிறது. இந் நிலையில் அத் தமிழ் ஈழம் அமைவதற்கு மேற்கொள்ளப் படும் முயற்சிகள் அனைத்துக்கும் இனி தி. மு. க. பொதுக்குழு முழு ஆதரவு அளிக்கும்'' என்று அத்தீர்மானம் கூறியது.

வேறுபல தமிழக அரசியல் கட்சிகளும் இதே பாணியில் தீர்மானங்கள் நிறைவேற்றின. இவை அனைத்தும் ஈழத் தமிழ் மக்கள் மீதான சிங்கள ஆட்சியாளர்களின் கெடுபிடிகள் அதிகரிக்க உதவினவே தவிர பிரச்சினை தீர உதவவில்லை.

பிரதமர் இந்திராகாந்தி இந்தியாவுக்கு எதிரான சர்வதேச சக்திகளுடன் கூடி குலாவிக் கொண்டிருந்த இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை வழிக்குக் கொண்டு வர, ஈழத்தமிழர் பிரச்சினையை ஆயுதமாக ஏந்தினார்.

இந்தியாவை தமது பெரும் வர்த்தக சந்தையாகக் கருதிய பல நாடுகள் இந்தியாவுடன் அனுசரித்துப் போக வேண்டிய நிலையில் இருந்தன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் சில சிறிய நாடுகள் மீது படையெடுத்து அவற்றை அடிமைப்படுத்திய காரணத்தால் இந்தியாவின் விஷயத்தில் தலையிடும் தார்மிகப் பொறுப்பை இழந்திருந்தன.

ஈழத் தமிழத் தலைவர்கள் இந்திராவிடம் சரணடைந்தனர். அன்றைய தமிழக முதல்வர் எம். ஜி. ஆரும் கூட இந்திராவின் நடவடிக்கைகளுக்குப் பக்கபலமாக இருந்தார்.

இந்திராவின் படுகொலை ஈழத் தமிழரின் துரதிர்ஷ்டமாகவும் சிங்கள அரசின் அதிர்ஷ்டமாகவும்அமைந்தது ஏற்த உற்சாகத்தில் சிங்கள அரசு யாழ்ப்பாணத்தில் தமிழரை ஆயுத முனையிலும் பட்டினி போட்டும் அழித்தொழிக்க முற்பட்டபோது அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி உதவிக்கு விரைந்தார் தமிழருக்கு உரிமை கிடைக்க இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவுடன் ஒப்பந்தமும் செய்து கொண்டார். சம்பந்தப் பட்ட மக்களின் பிரதிநிதிகளின் ஒப்புதல் இல்லாமலேயே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அது என்று கூறி தமிழ்ப் போராளிகள் அதனை நிராகரித்துள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட மக்களின் ஒப்புதலின்றியே இந்தியா ஒப்பந்தம் செய்து கொண்டது அது தான் முதல் தடவை அல்ல. இந்தியத் தமிழர் விஷயத்தில் அவர்களது சருத்தைக் கேட்காமலேயே நேரு காலத்தில் இருந்தே இலங்கை அரசுடன் பல ஒப்பந்தங்களை இந்தியா செய்து கொண்டது. அவை அனைத்தும் தோல்வியில் தான் முடிந்தன.

ராஜீவ் கொலைக்குப் பிறகு இந்தியாவினதும் தமிழகத்தினதும் நிலை திசை மாறிப்போனது.

ஈழத் தமிழர் பிரச்சினை என்பது ஈழப்புலிகள் பற்றிய பிரச்சினை அல்ல. இரண்டையும் ஒன்றுபடுத்திக் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஈழப்புலிகளின் பங்களிப்பு இன்றி ஈழத்தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த முடியாது என்பது தான் யதார்த்த நிலை. ஒருவகையில் பார்த்தால் ஈழத்தமிழர் பிரச்சினை தீவிரமடைய தி. மு. க. ஒரு மறைமுகக் காரணம். தி. மு, க வின் [illegible] எழுச்சி பெறச் செய்த அதே நேரத்தில் சிங்கள அரசுகளை அச்சப்படச் செய்தது என்பதை மறந்துவிடக் கூடாது. அந்த அச்சத்தின் விளைவுகளே சிங்கள அரசுகளின் அடக்குமுறை நடவடிக்கைகள்.

ஈழத் தமிழர் இன்று இந்தியாவினதும் தமிழகத்தினதும் ஆதரவையே நம்பி இருக்கிறார்கள். வங்க தேசத்தை இந்தியா பிரித்துக் கொடுத்த மாதிரி தமிழ் ஈழத்தையும் இந்தியா பிரித்துக் கொடுக்கும் என ஈழத் தமிழர் எதிர்பார்க்கவில்லை. தங்கள் பாரம்பரிய மண்ணில் மானத்தோடும், மரியாதையோடும் சிங்கள மக்களுடன் சம உரிமையுடனும் வாழவே அவர்கள் விரும்புகிறார்கள். தி. மு. க. மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு தங்களுக்கு விடிவு காலம் பிறக்கும் என்று முழு மனதுடன் அவர்கள் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கையை தமிழகம் விரைந்து நிறைவேற்ற முடிந்தால் தமிழகத்துக்குப் பெருமை. அதற்கு என்ன வழி என்று அனைத்துத் தமிழக அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்து அதற்கேற்றபடி தி.மு.க. அரசு செயற் படுவது காலத்தின் கட்டாயமாகி விட்டது. முதல்வர் கருணாநிதி தமது காலத்திலேயே ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடிந்தால் வரலாறு அவரை வாழ்த்தும். ★

## இ.தொ.க. அலுவலகத்தில் திருட்டு

கொழும்பு, ஏப். 23

இ.தொ.காவின் கொழும்பு அலுவலகம் உடைக்கப்பட்டு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான உடைமைசள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பொலீஸார் மேற்கொண்ட விசாரணையையடுத்து அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியர் ஒருவரும், மற்றொருவரும் கைது செய்யப் பட்டனர். (இ-3-150)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 10 — 07 — 1946

மறைவு: 23 — 04 — 1996

### பொன்னையா கணேசு

(ராசு)

அன்பான அப்பாவே!

எங்களை விட்டு எங்கே சென்றாயோ? இவ்வளவு விரைவாய் பிரிவீர்கள் என்று நினைக்கவில்லை. கடலைக் கடந்து கரையைக் காணுமுன் சென்று விட்டீர்கள் அப்பா. அப்பா உங்களை எப்படி மறப்போம்? உங்கள் நினைவில் வாழும் எங்களுக்கு நல்லாசிகள் வேண்டுவீர்கள் அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

சாந்தி!

மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.

''சித்தார்த்தர் அகம்''
அல்வாய் வடக்கு. (46314)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 08 — 1956

மறைவு: 23 — 04 — 1996

### பிரான்சிஸ் ஜெயபாலன்

(ஆசிரியர் - புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்

''உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்''

இவரின் ஆன்மசாந்திக்காக இன்று (23-04-97) புதன்கிழமை காலை 11-00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடக்கும் திருப்பலியில் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்

5/7, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம். (46440)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சி படை கின்ஸாசாவை நெருங்குகின்றது

## இறுதி நேர சமரசப் பேச்சுக்கு அதிபர் இணக்கம்

கின்ஸாசா, ஏப். 23

ஸயர் நாட்டு கிளர்ச்சிக் கூட்டணிப் படைகள் தலைநகர் கின்ஸாசாவை நோக்கி அலை அலையாக முன்னேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கின்ஸாசாவைக் கைப்பற்றுவதற்காக ஒரு லட்சம் மேலதிக கெரில்லாக்களை தலைவர் கபீலா திரட்டியுள்ளார் என்றும்—

அதிபர் முபுட்டுவை தலைநகரில் இருந்து அகற்றுவதற்கான இறுதிப் போராட்டத்துக்கு இவர்கள் திரட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

லுபும்பாஸி நகரத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் கிளர்ச்சிக் கூட்டணித் தலைவர் கபீலா உரையாற்றினார்.

அதிபர் முபுட்டுவுடன் இணக்கப்பாடு ஒன்றுக்கு இடமே இல்லை என்றும் அவரும் அவரது சகாக்களும் நாட்டை விட்டு வெளியேறியே ஆகவேண்டும் என்றும் அங்கு உரையாற்றிய கபீலா தெரிவித்தார்.

அதிபர் முபுட்டுவுக்கும் சின்னாபின்னமாகிவிட்ட அவரது இராணுவத்துக்கும் ஒரே பிடியாக இன்னமும் எஞ்சியிருப்பது தலைநகர் கின்ஸாசாவே ஆகும்.

இதேவேளை —

கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அதிபர் முபுட்டு இணக்கம் தெரிவித்துள்ளார். ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விவரங்களை அவர் தெரிவிக்கவில்லை.

1965 ஆம் ஆண்டு சதிப்புரட்சி மூலம் பதவிக்கு வந்த முபுட்டு பதவி விலக வேண்டுமானால் ஜனநாயக முறையிலான தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அதில் அவர் மக்களால் தோற்கடிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்.

ஆனால் அதிபர் முபுட்டு தமது அதிகாரத்தைநிபந்தனை எதுவும் இன்றித் தங்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என்று கிளர்ச்சியாளர்கள் பிடிவாதமாக உள்ளனர்.

'முபுட்டுவுடன் தொடர்ந்து நீடிக்கும் பேச்சுவார்த்தைகள் எதுவுமே இடம் பெறாது; அதிகாரக் கைமாற்றத்தைப் பற்றி மட்டுமே பேசப்படும். அது தவறினால் நாங்கள் கின்ஸாசாவுக்குள் பிரவேசிப்போம்'' — என்று கபீலா கடைசியாக அளித்த தொலைபேசிப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில்—

முபுட்டுவுக்கும், கபீலாவுக்கும் இடையேயான உத்தேச பேச்சுவார்த்தையை அனேகமாக இன்று கேப்ரவுணில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (ஐ)

## முன்னாள் அதிபர் மரணம்

பிலிப்பீன்ஸ் நாட்டு முன்னாள் அதிபர் மகதாகான் மாரடைப்பால் காலமானார். மணிலாவில் உள்ள மஹாதி மருத்துவ மனையில் நேற்று முன் தினம் இரவு அவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## கிளின்ரன் எச்சரிக்கை

ஹொங்கொங் எதிர்வரும் ஜூலை மாதம் முதல் சீனாவின் நிர்வாகத்தின் கீழ் வந்த பின்னர் அங்கு சுதந்திரம் பாதிக்கப்படுமானால் அதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இவ்வாறு எச்சரித்திருக்கின்றார். (ஐ)

## பெரும் தீ!

அமெரிக்காவின் வடடக்கோட்டா நகரில் கிராண்ட் போர்க்ஸ் மாவட்டத்தில் பரவியுள்ள பெரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் தீயணைப்புப் படையினர் அயராது பாடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் இம்மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருந்தது தெரிந்ததே.

# வான் தடையை ஈராக் மீறுமா?

## வளைகுடாவில் பதற்றம்

தெஹிரான், ஏப். 23

**மக்காவுக்குப் புனித யாத்திரைக்காகச் சென்ற ஈராக்கிய யாத்திரிகர்கள் மீண்டும் விமானம் மூலம் நாடு திரும்ப இருப்பதை ஒட்டி வளைகுடாவில் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது.**

தனது ஆகாயப் பிராந்தியத்தில் ஐ. நா. ஏற்பாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் வான் தடை உத்தரவை மீறி ஈராக் தனது ஹஜ் பயணிகளை விமானம் மூலம் மக்காவுக்கு அனுப்பியிருந்தது.

ஈராக்கின் இச் செயல் அப்போது அமெரிக்காவுக்குச் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

தற்போது மீண்டும் வான்தடை உத்தரவை மீறி ஈராக் தனது யாத்திரிகர்களை விமானம் மூலம் நாட்டுக்குள் திருப்பி அழைத்துவரவுள்ளது.

அமெரிக்கா இதில் தலையிடுமானால் தகுந்த பதிலடி கொடுக்கப் போவதாக ஈராக் அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததை அடுத்து வளைகுடாவில் பதற்றம்ஏற்பட்டது.

ஹஜ் பயணத்தின் முக்கியத்துவத்தைத் தாங்கள் அங்கீகரிப்பதாகவும்—

ஆனால் பயணிகளை அழைத்துவர வேறு மார்க்கங்கள் இருக்கின்ற நிலையில் ஐ. நா. தடை உடன்படிக்கையை ஈராக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு என்றும் —

இதனை ஈராக் மீறுமானால் பொருத்தமான பதில் நடவடிக்கையை அமெரிக்கா எடுக்கும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## அமெரிக்கரை வெளியேற பணிப்பு

நியூயோர்க், ஏப். 23

ஸயரில் உள்ள அமெரிக்கத் தூதரக உத்தியோகத்தர்களின் குடும்பத்தவர்களையும் பிரஜைகளையும் அங்கிருந்து வெளியேறி விடுமாறு அமெரிக்கா உத்தரவிட்டிருக்கிறது.

இதேவேளை —

ஸயருக்கு அருகே உள்ள கொங்கோவின் தலைநகரான பிரசவில்லியில் உள்ள அமெரிக்கா, பிரான்ஸ், பெல்ஜியம், பிரிட்டன் ஆகிய நாடுகளின் படைகள் ஸயரில் இருந்து தத்தமது நாட்டுப் பிரஜைகளை வெளியேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படின் எவ்வாறு அவசரமாகச் செயற்படுவது என்பது குறித்த ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. (ஐ)

## ஆதி வாசிகளின் தலைவர் மாணவர்களால் அடித்து கொலை!

### பிறேசிலில் சம்பவம்

பிறேசிலியா, ஏப். 23

பிறேசில் நாட்டின் பூர்வீகக் குடிகளில் ஒன்றான ''பெட்றாசா'' ஆதிவாசிகளின் தலைவர் தலைநகர் பிறேசிலியாவில் பாடசாலை மாணவர்கள் சிலரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

''பெட்றாசா'' இனத்தின் பூர்வீக நிலப்பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதற்காக இவர் தலைநகர் பிறேசிலியாவுக்கு வந்திருந்தார் என்றும் —

பஸ்நிலையம் ஒன்றில் உறங்கிக் கொண்டிருந்த அவரை பாடசாலை மாணவர்கள் ஐவர் அடித்துக் கொன்று தீயிட்டுக் கொளுத்தினர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்த மாணவர்களில் ஒருவர் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் மகன் என்றும், இன்னொருவர் இராணுவ அதிகாரி ஒருவரின் மகன் என்றும் தெரிய வந்துள்ளது. (ஐ)

# ஜின்னா வாழ்க்கைத் திரைப்படம்; பாகிஸ்தான் அரசு நிதி வழங்காது!

## சர்ச்சையை அடுத்து இந்த முடிவு

இஸ்லாமாபாத், ஏப். 23

பாகிஸ்தான் நாட்டின் சிற்பி என வர்ணிக்கப்படும் முகமது அலி ஜின்னாவின் வாழ்க்கை வரலாறு தொடர்பான திரைப்படத்துக்கு நிதி வழங்குவதில்லை என்று பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று தயாரிக்கத் திட்டமிட்டிருந்த இத்திரைப்படத்துக்குச் செலவாகும் நிதியில் மூன்றில் ஒரு பங்கை வழங்க பாகிஸ்தான் அரசு முன்னர் முன்வந்திருந்தது தெரிந்ததே.

ஆனால் இப்படத்தில் ஜின்னாவின் பாத்திரத்தில் தோன்றி நடிக்க பிரபலதிகில் படக் கதாநாயகன் கிறிஸ்தோபர் லீ தெரிவு செய்யப்பட்டது பாகிஸ்தானில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருந்தது.

பயங்கரமான 'ட்ரெகுலா' வேடத்தில் பார்த்துப் பிரமித்து வந்த ஒருவரைத் தமது தேசியத் தலைவராகப் பார்க்க பாகிஸ்தானியர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்று தெரிவித்து பாகிஸ்தானில் இத்திரைப் படத்துக்கு எதிர்ப்புக் கிளம்பி இருந்தது. (ஐ)

# இம்மாத இறுதியில் பிரான்ஸில் தேர்தல்

பாரிஸ், ஏப். 23

பிரான்ஸில் இடைத் தேர்தல்கள் எதிர்வரும் 25 ஆம் திகதியும் ஜூன் மாதம் முதல் திகதியும் நடைபெறும் என்று அதிபர் ஜோர்ஜ் ஷிராக் அறிவித்துள்ளார்.

வானொலி மற்றும் தொலைக்காட்சிமூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அவர் இதனை அறிவித்தார்.

ஐரோப்பிய ஒழுங்கமைப்பு, மற்றும் தனியான நாணயம் தொடர்பான ஆயத்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வசதியாக விரைவாகவே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டி இருப்பதாக அவர் தெரிவித்தார். (ஐ)

## மொஸ்கோ - வாஷிங்டன் இடையே

# ரஷ்ய மன்னராட்சிக் காலத்து ஆபரணங்கள் குறித்து இழுபறி!

ரஷ்யாவில் அரச குடும்பத்தினருக்குச் சொந்தமாக ஒரு காலத்தில் இருந்த விலை மதிப்பற்ற ஆபரணங்கள் தொடர்பாக ரஷ்ய அதிகாரிகளுக்கும், அமெரிக்க அதிகாரிகள் சிலருக்கும் இடையே இழுபறி ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆபரணங்களை கண்காட்சி ஒன்றில் வைப்பதற்காக அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

டெக்ஸாஸ் மாநிலத்தில் நடைபெறும் இக் கண்காட்சியில் அவற்றைபார்வைக்கு வைக்கப்படவேண்டும் என்பதில் கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் விடாப்பிடியாக இருக்கின்றனர்.

ஆனால் மொஸ்கோ நகரத்தின் 850 ஆவது ஆண்டு நிறைவைஒட்டி செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் கொண்டாட்டங்களுக்காக அவற்றை உடனடியாக மொஸ்கோவுக்கு திருப்பி அனுப்புமாறு ரஷ்ய கலாசார அமைச்சு கேட்டுள்ளது.

இந்தத் தகராறு எதிர்காலத்தில் ரஷ்யாவுக்கும் [illegible] யான கலாசாரப் பரிமாற்றங்களைப் பாதிக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. (ஐ)

## உலக அரங்கில்

## மொஸ்கோவில் சீன அதிபர்

மொஸ்கோ. ஏப். 23

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு சீன அதிபர் ஜியாங் செமின் நேற்று மொஸ்கோ போய்ச் சேர்ந்தார்.

முன்னாளைய சீன — சோவியத் எல்லைப் பிரதேசத்தை இராணுவ விலக்குப் பிராந்தியமாக மாற்றிடுவது தொடர்பான மிக முக்கியமான ஒப்பந்தம் ஒன்றை அவர் ரஷ்ய தலைவர்களுடன் செய்து கொள்ளவுள்ளார்.

உலகின் எஞ்சிய பகுதிகளில் நிபந்தனைகளை விதித்து தனது ஆதிக்கத்தைச் செலுத்த அமெரிக்கா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து மொஸ்கோவும், பீஜிங்கும் கொண்டுள்ள கவலையை இரு நாட்டுத் தலைவர்களும் உச்சிமாநாட்டில் வெளிப்படுத்த உள்ளனர் (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து கடித தொடர்புகளையும் தமிழ் மொழி மூலமே மேற்கொள்க

## கல்வி அதிகாரிகளுக்குப் பணிப்பு

வலிகாமம் தெற்கு, ஏப். 23

தமிழ்மொழி அமுலாக்கலை விரைவுபடுத்துமாறும், அனைத்துக் கடிதத் தொடர்புகளையும் தமிழ் மெபழியிலேயே மேற்கொள்ளுமாறும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் — விளையாட்டுத்துறை அமைச்சுச் செயலாளர் திரு. சுந்தரம்டிவகலாலா மாவட்ட மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

மாவட்ட, வலயக்கல்விக் பணிப்பாளர்கள், கோட்டப் கல்வி அதிகாரிகளுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்மொழி அமுலாக்கம் சில கல்விப்பணிமனைகளில் முழுமையாக அமுலாக்கப்படுவதில்லை என்பது எமது அமைச்சுக்குக் கிடைக்கும் ஆங்கில மொழிக் கடிதங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இதனைத் தவிர்த்து அனைத்துக் கடிதங்களையும் தமிழ் மொழியிலேயே அனுப்புமாறு வலியுறுத்துகிறேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ-152)

## திறப்பு விழா

திருநெல்வேலி. ஏப். 23

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கிய 3 1/2 இலட்சம் ரூபா நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட வேலணை அரசினர் கிராமிய வைத்தியசாலையின் திறப்பு விழா நாளை வியாழக் கிழமை முற்பகல் நடைபெற வுள்ளது. (இ-135)

## படையினர்..

(முதலாம் பக்கத் தொடர்)

சம்பவம் இடம்பெற்றது.

புலிகளின் ஆயுதக் கப்பல்கள் குறித்து விமானப்படையின் எம். ஐ. 24 ஹெலிகளே கடற்படைக்கு இது குறித்து தகவல் கொடுத்தன.

திருகோணமலையிலிருந்து விரைந்த கடற்படையின் இரு அதிவேகப் படகுகளும் அந்த இரு கப்பல்களையும் தடுத்து நிறுத்தின.

முதலில் அக்கப்பல்களின் கப்டன்களை அடையாளம் காட்டுமாறு கடற்படையினர் உத்தரவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து இரு கப்பல்களையும் கடற்படையினர் சோதனையிட்டனர்.

அக்கப்பல்களில் ஒன்று இந்தியாவில் இருந்து சீனியை கொழும்புக்கு எடுத்துச் சென்றது என்பதும் —

மற்றைய கப்பல் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் உணவுப் பொருள்களை கொழும்பில் இருந்து காங்கேசன்துறைக்கு எடுத்துச் சென்றது என்பதும் — அப்பொழுது தெரியவந்தது.

அதன்பின் இரு கப்பல்களையும் பயணத்தைத் தொடர கடற்படையினர் அனுமதித்தனர்.

கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி முல்லைத்தீவுக்கடலில் கியூபா நாட்டுக் கப்பல் ஒன்றை விமானப்படையினர் தாக்கிய சம்பவத்தையடுத்து, போதிய காரணங்கள் இன்றி கப்பல்களைத்தாக்கக்கூடாது என விமானிகளுக்கு விடுக்கப்பட்ட உத்தரவை அடுத்தே இவ்விரு கப்பல்களும் தாக்கப்படவில்லை என்று விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ- 3- 150)

## ஜி..சீ.ஈ..

(முதலாம் பக்கத் தொடர்)

குளிரூட்டிகளை பயன்படுத்த தடைவிதிக்கப் பட்டுள்ளதால் கணனிகளை இயக்க முடியாததாலும் —

சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சை முடிவுகள் இன்னமும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்காததாலும் —பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதே வேளை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்பே பரீட்சை முடிவுகள் வெளியாகலாம் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

இம் மாத இறுதியில் பரீட்சை முடிவுகள் வெளியாகலாம் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

(இ-3-10-150)

## கோணேசர்...

(முதலாம் பக்கத் தொடர்)

சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அன்று காலை 7-00 மணிக்கும் 8-30 மணிக்கும் இடையில் கும்பாபிஷேகத்தைச் செய்வார்.

கும்பாபிஷேகத்தை ஒட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி பாவநாசம் சுனையிலிருந்து தீர்த்தம் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

(இ-3-150)

## விளையாட்டு அதிகாரி பதவி வெற்றிடங்கள்

திருநெல்வேலி, ஏப். 23

வலி.தென் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் விளையாட்டு அதிகாரி பதவியும், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியும் நிரப்பப்படாது வெற்றிடங்களாக உள்ளன. (இ-135)

## இலங்கை அணி 206

கொழும்பு ஹேத்தாராம விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையேயான முதலாவது டெஸ் போட்டியின் நான்காம் நாள் ஆட்ட முடிவின்போது இலங்கை அணிதனது 2ஆவது இனிங்சில் 3 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணியின் சார்பில் ரசல் ஆனோல்ட் 15, மாவன் அத்தபத்து 25, அர்ஜுனா ரணதுங்கா 58 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். அரவிந்த டி சில்வா, ஹர்ஷான் திலகரத்ன ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 78, 20ஓட்டங்களைப் பெற்றனர்.

370 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 378 ஓட்டங்களுக்கு தனது முதலாவது இனிங்சை இழந்தது. (இ-10)

## புளொட்டின் மே தினக் கூட்டம் யாழ். நகரில்

யாழ்ப்பாணம்,ஏப்.23

புளொட் அமைப்பினர் இந்த வருட மே தினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்திலும் நடத்த உள்ளனர்.

குருநகர் கலை அரங்கில் இந்தக்கூட்டம் நடைபெறும்.

இந்த மே தினக் கூட்டத்தில் கடற்றொழிலாளர் அமைப்புக்கள், தொழிற்சங்க அமைப்புக்கள் உட்பட பல அமைப்புக்கள் கலந்து கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விமானத் தாக்குதலுக்கு உள்ளான கியூபா கப்பல் இன்னும் திருத்தப்படவில்லை

கடந்த பெப்ரவரி 9 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பகுதியில் விமானப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளான கியூபா நாட்டுக்கப்பல் இன்னமும் திருத்தப்படாத நிலையில் கொழும்புத் துறைமுகப் பகுதியில் தரித்து நிற்கிறது.

அரசாங்கத்திடம் இக்கப்பல் நிறுவனத்தினர் நஷ்ட ஈடு கோரியுள்ளனர்என்றும்— நஷ்டஈடு வழங்க இலங்கை அரசு சம்மதித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கப்பல் மீதான தாக்குதல் தொடர்பாக கியூபா அரசாங்கம் சுயாதீன விசாரணை ஒன்றை நடத்திவருகிறது.

புலிகளின் கப்பல் என்று கருதி கியூபாக் கப்பல் மீது விமானத் தாக்குதல் நடத்தப் பட்டது தெரிந்ததே.

(இ-3-150)

## வலி. மேற்கு விசேட அ.அட்டை

யாழ்ப்பாணம், ஏப். 23

வலிகாமம் மேற்கு பிரதேசப் பிரிவில் இருந்து விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் அந்தந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்களிடம் சென்று அடையாள அட்டை வந்தது குறித்து உறுதிப்படுத்திய பின்னர் பிரதேச செயலகத்தில் தினமும் பிற்பகல் 1.00 மணி முதல் 4 மணி வரை அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என வலிமேற்கு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

(இ)

## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஏப். 23

களுத்துறை, மகஸின் சிறைச்சாலைகளில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் தமது விவரங்களை தமது அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு கேட்டுள்ளது.

இவர்களின் வழக்குகள் தொடர்பாக மேல் நடவடிக்கைகள் எடுக்க வசதியாகவே விவரங்கள் கோரப்படுவதாக அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-3)

## சமய சந்திகளில்

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ கொடியேற்றத் தினம் இன்று ஆகும். இம் முறை மகோற்சவம் நடைபெறாத காரணத்தால் தொடர்ந்து பத்துத் தினங்கள் அபிஷேக ஆராதனை நடைபெறும். (இ)

★ ★ ★

திருநெல்வேலி, ஏப். 23

சங்குவேலி வெட்டுக் [illegible] சித்தி விநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை நடைபெறும்.

(இ-135)

## பதுங்குகுழிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் நாகர்கோயிலில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் 10 படையினர் பலியான சம்பவம், கடந்த திங்களன்று வாழைச்சேனையில் விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது பல படையினர் பலியான சம்பவம் ஆகியன தொடர்பாக அவர் பேட்டி அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இராணுவ ஆய்வாளர் தெரிவித்ததாவது:-

நாகர்கோயில், வாழைச்சேனை தாக்குதல் சம்பவங்களில் இருந்து தெரியவருவது என்னவென்றால் விடுதலைப் புலிகள் திட்டமிட்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளவில்லை என்பதும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தாக்குதல்களை மேற்கொள்கிறார்கள் என்பதுமே.

குறிப்பாக நாகர்கோயில் கண்ணிவெடிச் சம்பவமானது விடுதலைப் புலிகள் அப்பகுதியில் இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது.

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே இனப்பிரச்சினை தொடர்பாக எட்டப்பட்ட உடன்பாட்டின் பின்னர் சில முன்னேற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் அரச மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் அதில் உண்மையில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் வடக்கில் புத்தாண்டு வேளையில் யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருந்தனர் எனப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகின. இருப்பினும் யுத்த நிறுத்தம் இடம் பெறவில்லை.

தற்போது இடம் பெற்றுள்ள அதாவது நாகர் கோயில், வாழைச்சேனை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களானவை விடுதலைப் புலிகள் முன்னர்போல் தாக்குதல்களை மேற்கொள்ளாவிடினும் தாக்குதல்களை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தால் அவற்றைப் பயன்படுத்த விடுதலைப் புலிகள் தயாராயுள்ளனர். என்பதையே காட்டுகின்றன.

**இராணுவ அழுத்தம் இல்லை**

அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே எட்டப்பட்ட உடன்பாட்டின் பிரதிபலனாக இராணுவ ரீதியாக எந்தவொரு அழுத்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் அதற்கு மாறுபட்ட விதத்தில் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கு அரசு தயாராகி வருகிறது என்பதை அனைவரும் அறிவர்.

இராணுவம் மேற்கொள்ள இருக்கும் தாக்குதலுக்கு முகங்கொடுக்க விடுதலைப் புலிகளும் தயாராகி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினரின் அடுத்த நடவடிக்கையாக வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான நடவடிக்கையாக இருக்கலாம் என்ற ஊகத்தில் விடுதலைப் புலிகள் ஓமந்தையில் இருந்து கிளிநொச்சி வரை பதுங்குகுழிகள் அமைத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத் தாக்குதலைத் தவிர்ப்பதற்காகவே இந்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிகிறது. ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் எனக் கூறமுடியாது.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-10)

## காணாமற் போன...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை 7 மணிக்கு சாட்சிக்காரர்களுடன் யாழ். செயலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து விசாரணை நடைபெறும் இடத்துக்கு அவர்கள் செயலக அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படுவர் என்று செயலக அதிகாரி தெரிவித்தார். (இ-3-150)


## உங்கள் கவனத்துக்கு

### உதயன் அலுவலகம்

**இப்போது**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்தில் இயங்குகிறது.

செய்தியாளர்கள், விளம்பரதாரர்கள், விநியோக முகவர்கள், வாசகர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் மேற்படி விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- நிர்வாகத்தினர்



## மரண அறிவித்தல்

### இராஜலிங்கம் நடராசா

(முன்னாள் ஊழியர் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்)

இராஜலிங்கம் நடராசா அவர்கள் 21-04-97 மாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசலிங்கம் அன்னபூரணம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற A. R. சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்), காலஞ்சென்ற சொர்ணம்மா மற்றும் திருமதி சிவஞானம்மா, திருமதி குணபூபதி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் (கெங்கநாதன் — முன்னாள் அதிபர், யாழ். புகையிரதநிலையம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், தாமோதரம் பிள்ளை மற்றும் நாகபூஷணி, குலராஜன், தர்மரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-04-97 செவ்வாய்க்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி த.சண்முகலிங்கம்
திரு ச. சிவலோகநாதன்
(சகோதரன்)

56, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(46704)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-04-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org